மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம். மோட்டார் வாகன விபத்து வழக்குகள் நான்கு ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் இருப்பவை பின்வருமாறு :—

(1) செங்கல்பட்டு	6
(2) தென் ஆற்காடு	27
(3) வட ஆற்காடு	1
(4) திருச்சிராப்பள்ளி	38
(5) மதுரை	3
(6) கன்னியாகுமரி	1
(7) கோயம்புத்தூர்	3

(இ) மதுரைக்குத் தனியாக ஒரு மோட்டார் வாகன விபத்து வழக்கு மன்றம் அமைப்பது பற்றி சென்னை உயர்நீதி மன்றத்துடன் கடிதப் போக்கு வரத்து நடந்து கொண்டிருக்கிறது.

Demand of Exorbitant Taxi Fares by Taximen.

* 219 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government are aware that some taximen at Madras Airport demand extra payment from passengers over and above the meter charges; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

வாடகை மோட்டார் வண்டிக்காரர்கள் அதிகக் கட்டணம் கோருதல்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை விமான நிலையத்தில் வாடகை மோட்டார் வண்டிக் காரர்கள், மீட்டர் கட்டணத்திற்கும் மேலாக அதிகக் கட்டணம் கொடுக்க வேண்டுமென பயணிகளிடம் கேட்கிருர்கள் என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) வாடகை மோட்டார் வண்டி உரிமையாளர்கள் சங்கத்தினர் ஓட்டுநர்கள் சங்கத்தினர், காவல்துறை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து, வாடகை மோட்டார் வண்டிக்காரர்கள் மிகவும் அதிகமாகக் கட்டணங்கள் கேட்பதைத் தவிர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider having mini-buses of the Tourism Development Corporation to operate from the airports for this purpose?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, now the problem has been solved to a considerable extent. So, we will wait and see.

THIRU C. V. RAJAGOPAL : Hon. Chairman, Sir, may I know whether it is a fact that passes issued to M.L.C.'s and M.L.A.'s are not considered valid for travel in the Tourism Development Corporation buses and that the pass holders are not allowed to travel in those buses?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the passes issued to the M.L.A.'s and M.L.C.'s are valid only for the buses of the Transport Corporations. As far as the Tourism Development Corporation buses are concerned, they have to make their own resolutions.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓரளவு இந்த நிலைமையை சமாளித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். என்றாலும் அவர்களையே முற்றிலும் நம்பிவிடாமல், ஒரு 25 சதவிகிதமாவது நம்முடைய அரசு டாக்சிகளை அங்கே நிறுத்திவைத்திருந்தால், இந்த விதமான சிக்கல்கள் ஏற்படாமலிருக்கும் என்பதை யோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டாக்சிகள் எல்லாம் ஒழுங்காக வர வேண்டுமென்றும், வரிசையாக நிற்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் அங்கிருந்து அதைக் கண்காணித்து வருகிறார்கள். டாக்சிகளின் எண், எந்த நேரத்திலே அங்கிருந்து புறப்படுகின்றன என்பன போன்ற விவரங்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். மீட்டருக்கு எவ்வளவு கட்டணம் ஆகிறதோ அதைவிட கூட ஐந்து ரூபாய் என்று அந்த டாக்சிக் கட்டணம்

நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. சென்னை விமான நிலையத்திலேயிருந்து சென்னையிலே உள்ள எந்தெந்த முக்கிய இடங்களுக்குப் போக எவ்வளவு சார்ஜ் ஆகும் என்கின்ற அட்டவணையும் சென்னை விமான நிலையத்திலே போடப்பட்டிருக்கிறது. தவறுகள் இருக்குமானால், அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது அண்மையிலே அமுலாகி வருகிறது. அதற்குப் பிறகு புகார்கள் அதிகம் காணோம்.

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, பலமுறை நானும் விமான நிலையத்திலேயிருந்து வந்திருக்கிறேன். எப்பொழுதுமே உள்ள கட்டணத்திற்கு வருவதற்கு பெரும்பாலும் எல்லோரும் மறுக்கிறார்கள். மீட்டரைப் பற்றிப் பேசாதீர்கள், நீங்கள் எங்கு போக வேண்டும், எவ்வளவு தருகிறீர்கள் என்று கட்டுக் குத்தகையாகப் பேச விரும்புகிறார்களேயன்றி, அளவுக் கருவி காட்டுகின்ற அளவுக்கு நாங்கள் ஓட்ட முடியாது என்று மறுக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமாவது ஒரு நான்கு பத்து டாக்சி வண்டிகளை அங்கே நிறுத்தி, இந்த விதத்தில் தவறுகள் ஏற்பட்டு, அதன் காரணமாக வெளிநாட்டுப் பயணிகள் நம்மைப்பற்றிக் குறைபடாத நிலையை உண்டாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று ஆலோசனை கூறி, அதைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக டாக்சி உரிமையாளர்களுடனும், ஓட்டுநர் சங்கத்தினருடனும் கலந்து பேசி, அளவு கருவி காட்டக்கூடிய கட்டணத்தைவிட ஐந்து ரூபாய் கூடுதலாக வாங்கிக்கொண்டு ஒழுங்காக ஓட்டுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டு அது நடைமுறையிலே இருக்கிறது. நாமே டாக்சிகளை நிறுத்துவதைவிட காவல் துறையினரை நிறுத்தி கண்காணிப்பதே மேல் என்று அரசு கருதுகிறது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே சலுகை இருக்கிறது, டூரிஸ்ட் கார்ப்பரேஷனிலேதான் சிக்கல், ஆகவே அங்கே சலுகை வேண்டும் என்று கேட்டார்கள். அந்த டூரிஸ்ட் காப்பரேஷனிலேயும் பிரயாணம் செய்ய சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, டூரிசம் கார்ப்பரேஷனுடைய நிர்வாகம்.

Board of Management should decide about it.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, சிலர் சில பதிவான டாக்சிகாரர்களை அடிக்கடி வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அண்மையிலே அப்படி வழக்கமாக வருகிற டாக்சிகாரர்கள் உள்ளே வந்து, அழைத்து வந்தபோது, மற்ற டாக்சிகாரர்கள் எல்லாம் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்கிருர்கள். அந்த வரிசைப்படிதான் வரவேண்டும் என்று சில பதிவுகளை வைத்துக்கொள்வதற்கு ஏதாவது மாற்றங்கள் அல்லது ஒழுங்கு முறையை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த கியூ வரிசையிலே அனுமதிக்கப்படுகிறது என்ற நல்ல செய்தியைத் தந்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன். வழக்கமாகப் போக வேண்டுமென்ருல், சொந்தத்தில் கார் வைத்துக்கொள்வது நல்லது.

Scheme of Providing Cycle-Rickshaws

* 220 *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the number of pessons benefited under the Scheme of providing Cycle rickshaws in the place of hand-puuled rickshaws as on 31st July 1973; and

(*b*) the number of persons to whom cycle- rickshaws have to be given?

சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கை ரிக்ஷாக்களை அப்புறப்படுத்திவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கிய வகையில், 31—7—1973 ஆம் நாள் வரை, இவ்வித மாற்றுப்பலன் பெற்றுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இனியும், எவ்வளவு பேர்களுக்கு வழங்கிட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கை ரிக்ஷாக்களை அப்புறப் படுத்திவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் முதலமைச்சர் நிவாரண நிதி யிலிருந்து இதுவரை 768 கை ரிக்ஷா தொழிலாளர்களுக்கு இலவசமாக